31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	வ.வை	இ.அ.ந. ஊ.நி.ம.நி	மு.வ.வை	கடன் தீர்ப்பனவுச் செலவு	வி.கி.கூ.	காப்பு	மொத்தம்
சொத்துக்கள்							
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	-	4,438,210	-	-	4,438,210
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	-	2,997,535	-	-	2,997,535
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	-	-	-	9,225,543	-	-	9,225,543
பெறுதி நிதியியல் சாதனங்கள்	1,163,537	-	-	-	-	-	1,163,537
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள்	-	-	-	-	-	-	-
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	-	5,074,856	-	-	5,074,856
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	-	52,667,312	-	-	52,667,312
நிதியியல் முதலீடுகள்	3,418,139	-	-	-	29,801,689	-	33,219,828
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**4,581,676**	**-**	**-**	**74,403,456**	**29,801,689**	**-**	**108,786,821**

31/12/2015 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	வ.வை	இ.அ.ந. ஊ.நி.ம.நி	கடன் தீர்ப்பனவுச் செலவு	காப்பு	மொத்தம்
பொறுப்புக்கள்					
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	2,823,920	-	2,823,920
பெறுதி நிதியியல் சாதனங்கள்	851,015	-	-	-	851,015
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்	-	-	-	-	-
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை	-	-	78,968,451	-	78,968,451
ஏனைய கடன்பாடுகள்	-	-	362,520	-	362,520
வழங்கப்பட்ட படுகடன் பிணைகள்	-	-	-	-	-
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**851,015**	**-**	**82,154,891**	**-**	**83,005,906**

31/12/2014 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	வ.வை	இ.அ.ந. ஊ.நி.ம.நி	மு.வ.வை	கடன் தீர்ப்பனவுச் செலவு	வி.கி.கூ.	காப்பு	மொத்தம்
சொத்துக்கள்							
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	-	3,518,106	-	-	3,518,106
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	-	2,941,164	-	-	2,941,164
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	-	-	-	11,922,246	-	-	11,922,246
பெறுதி நிதியியல் சாதனங்கள்	470,207	-	-	-	-	-	470,207
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள்	-	-	-	-	-	-	-
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	-	14,039,433	-	-	14,039,433
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	-	57,091,200	-	-	57,091,200
நிதியியல் முதலீடுகள்	4,387,755	-	-	-	27,485,025	-	31,872,780
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**4,857,962**	**-**	**-**	**89,512,149**	**27,485,025**	**-**	**121,855,136**

31/12/2014 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	வ.வை	இ.அ.ந. ஊ.நி.ம.நி	கடன் தீர்ப்பனவுச் செலவு	காப்பு	மொத்தம்
பொறுப்புக்கள்					
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	911,902	-	911,902
பெறுதி நிதியியல் சாதனங்கள்	664,283	-	-	-	664,283
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்	-	-	-	-	-
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை	-	-	93,433,707	-	93,433,707
ஏனைய கடன்பாடுகள்	-	-	-	-	-
வழங்கப்பட்ட படுகடன் பிணைகள்	-	-	-	-	-
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	**664,283**	**-**	**94,345,609**	**-**	**95,009,892**

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டிருப்பவை - வ.வை
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டுக்காக நியமிக்கப்பட்டவை - இ.அ.ந.ஊ.நி.ம.நி
கடன்கள் மற்றும் வருமதிகள்/கடன் தீர்ப்பனவிலுள்ள வைப்புக்கள்/கடன் தீர்ப்பனவுச் செலவு
முதிர்ச்சியடையும் வைக்கப்பட்டிருப்பவை - மு.வ.வை
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை - வி.கி.கூ
நியாய மதிப்பீட்டுச் சாதனங்கள் மற்றும் காசுப்பய்ச்சல் - காப்பு

ஸ்டான்டர்ட் சார்ட்டர்ட் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி

அ.டொலர்.மில்

வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்	நடப்பு காலப் பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	முன்னைய காலப்பகுதி 31/12/2014இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)
வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்	268,083	292,571
தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு	(6,023)	(3,276)
திரண்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு	(657)	(696)
	261,403	**288,599**
இலாபம் அல்லது நட்ட ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ளவை உள்ளடங்கலாக	(4,047)	(3,904)
தேறிய கடன்கள் மற்றும் வருமதிகளும்	**257,356**	**284,695**

ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகளுக்கும் கொடுக்கவேண்டியவை - பொருள் ரீதியாகநடப்பு காலப் பகுதி	நடப்பு காலப் பகுதி 31/12/2015இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)	முன்னைய காலப்பகுதி 31/12/2014இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது)
வாடிக்கையாளர் கணக்குகள்	350,633	405,353
வாடிக்கையாளர் கணக்குகள். அடங்கலாக, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள நிதியியல் பொறுப்புக்கள்	8,494	8,836
மொத்தம்	**359,127**	**414,189**

அத்தாட்சிப்படுத்துகை:

மேலேயுள்ள தகவல்களானது 31 டிசம்பர் 2015 கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையிலிருந்து இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS/LKAS) தொகுக்கப்பட்டவையாகும்.

மேலுள்ள அறிக்கைகள், இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையானது KPMG இனால் கணக்காய்வு செய்யப்பட்டு, மாறுபடாத அபிப்பிராயத்துடன், விஷேச சொல்லழுத்தமாக, (அ) வங்கியினால் இலங்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட பற்றுக்கள் வரி தொடர்பான ஆணை குறிப்பும், அரசால் கையகப்படுத்தப்பட்ட வங்கியின் ஒரு அறுதி சொத்தை பற்றியும், அவர்களது 28ம் மார்ச் 2016இல் கணக்காய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

………………………………
ஜிம் மெக்கேப்
(கையொப்பமிடப்பட்டது) பிரதம நிறைவேற்று அதிகாரி
திகதி: 28/03/2016

………………………………
நிஷானி ஆரியவன்ச
(கையொப்பமிடப்பட்டது) நிதியியல் கட்டுப்பாட்டாளர்
திகதி: 28/03/2016

Standard Chartered

கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

ஸ்டான்டர்ட் சார்ட்டட் என்பது உலகின் பலம்பொருந்திய பல சந்தைகளில் 150 வருடகால வரலாற்றைக் கொண்ட ஒரு முன்னணி சர்வதேச வங்கியியல் குழுமம் ஆகும். இது ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்கள் முழுவதும் மக்களுக்கும் கம்பனிகளுக்கும் வங்கியியல் சேவைகளை வழங்கி, முதலீடு, வர்த்தம் ஆகியவற்றை முன்கொண்டு செல்கின்ற அதேவேளை செல்வத்தை உருவாக்கி வருகின்றது. லண்டனில் தலைமையகத்தை கொண்டியங்கும் இக் குழுமம், லண்டன் மற்றும் ஹொங்கொங் பங்குச் சந்தைகளில் "இரட்டை முதல்நிலை பட்டியலிடலை" கொண்டுள்ளது. அத்தோடு சந்தை மூலதனவாக்கத்தின் அடிப்படையில் குவுளுநு 100 இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்டான்டர்ட் சார்ட்டட் இனது அடிப்படை ஆதரமான வர்த்தக நிதி மற்றும் வணிக வங்கியியல் ஆகியவையே அதனது வரலாற்றில் பெற்றுக் கொண்ட வெற்றிக்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. இருப்பினும் அதனது வர்த்தக நடவடிக்கைகள் தற்போது மேலும் பரந்த அடிப்படையிலானதாக முன்னேறியிருப்பதுடன், 30 இற்கும் மேற்பட்ட சந்தைகளிலான சில்லறை வங்கியியல் செயற்பாட்டை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. ர்நசந கழசா பழழன என்ற எமது வங்கியின் வர்த்தக குறியீட்டு வாக்குறுதியானது வங்கியால் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானத்திலும் உட்பொதிந்திருக்கின்றது. அதுமட்டுமன்றி, வாடிக்கையாளர்கள், பங்குரிமையாளர்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளுக்காக நாம் வெளிப்படுத்தும் அர்ப்பணிப்பில் அடிக்கல்லாகவும் அது திகழ்கின்றது.

கூட்டாண்மை ஆளுகைக்கான எமது ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை

ஸ்டான்டர்ட் சார்ட்டட் ஆனது ஒரு குழும கட்டமைப்பை கொண்டுள்ளது. இது, துணை நிறுவனங்கள் மற்றும் கிளைகளின் ஊடாக இயக்கப்படுவதுடன், ஒட்டுமொத்தமான ஆளுகையிலும் ஒரு தொடர்ச்சியான அணுகுமுறையை பேணி வருகின்றது. அதேவேளை உள்நாட்டு சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆளுகை சார்ந்த தேவைப்பாடுகளுக்கும் மதிப்பளித்துச் செயற்பட்டு வருகின்றது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில், இவ் ஆளுகையானது குழுமத்தின் எட்டு புவியியல் பிராந்தியங்களை முகாமைத்துவம் செய்திருக்கின்றது. சம்பந்தப்பட்ட பிராந்திய பிரதம நிறைவேற்று அதிகாரி காரியாலயங்கள், வணிகங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் ஊடாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. வணிக மீள் ஒழுங்கமைத்தல் செயற்பாடுகளின் ஒரு அங்கமாக, அதிக எண்ணிக்கையிலான பிராந்தியங்கள் - நான்கு பிராந்தியங்களாக குறைக்கப்பட்டன. குழுமத்தின் பங்குதாரர்களது தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு, குழுமத்தின் பெறுமதிகள், கலாசாரம் ஆகியவை 2015 நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட புதிய மூலோபாயத்தின் அடிப்படையில் குழுமத்தினால் செயற்திறனான முறையில் முகாமைத்துவம் செய்து, கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதை இது உறுதிசெய்வதாக அமைகின்றது. பங்குதாரர்கள் எனும் தரப்பினரில், வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக – அரசாங்கம், ஒழுங்குபடுத்துனர்கள், பங்குரிமையாளர்கள், ஊழியர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நாம் வர்த்தகத்தை மேற்கொண்டு வருகின்ற மக்கள் சமுதாயங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. ஒரு முன்னணி சர்வதேச வங்கி என்ற வகையில் ஸ்டான்டர்ட் சார்ட்டட், தனது செயற்பாட்டு தளத்தில் கூட்டாண்மை ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிப்பதில் முனைப்புடன் உள்ளது. எழுத்து வடிவிலான கூட்டாண்மை ஆளுமை நியமங்களுடன் ஒத்திசைந்து செயற்படுவது மட்டுமே போதுமானதல்ல என்று வங்கி நம்புகின்றது. செயலாற்றல்மிக்க கூட்டாண்மை ஆளுகைக்கு ஆதரவளிக்கும் நடத்தைகள் மற்றும் பெறுமதிகளுடன் இணைந்த ஒரு மூலதாரமான கலாசாரம் கம்பனிகளுக்கு இன்றியமையாதது ஆகும். ஆளுகைச் சட்டகத்தின் எழுத்துவடிவம் மற்றும் மெய்க்கருத்து ஆகிய இரண்டுடனும் ஒத்திசைந்து செயற்படுவதை உறுதிப்படுத்துவது தொடர்பில் பதிலளிக்க வேண்டியவர்களாகவும் விழிப்புடனும் நடந்து கொள்வது அனைத்து ஊழியர்களினதும் பொறுப்பாகும். ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கியைச் சேர்ந்த ஒவ்வொரு ஊழியரும் Here for good எனும் குழுமத்தின் வர்த்தக குறியீட்டு வாக்குறுதிக்கு அமைவாக வாழ்வதற்கும் அதேபோல், திறந்த தன்மையுள்ளதும், சவால்மிக்கதும் மட்டுமன்றி ஒத்திசைவான, ஒன்றிணைந்த ஒரு கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக திகழ்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றனர். அனைத்து ஊழியர்களும் தம்முடைய பொறுப்புக்களுடன் தொடர்புபட்ட அவசியமான திறன்கள், பெறுமதிகள் மற்றும் அனுபவங்களை கொண்டவர்களாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதில் வங்கி கவனம் செலுத்துகின்றது, ஊழியர்கள் சேவை வழங்குகின்ற போது அவர்கள் நடந்து கொள்ளும் விதம் தொடர்பில் கூடுமானவளவுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

உலகப் பொருளாதாரத்தில் பேரின-பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சவால்கள் பரந்தளவில் இப்போதும் காணப்படுகின்றன. இவ்வாறான விடயங்களில் அதிகமானவற்றை வங்கியால் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்பட்டாலும், தீவிரமான போக்குகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய அதனது உணர்திறனை குறைப்பதற்கு வங்கி தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தமது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்து வருகின்ற வங்கி அதேநேரத்தில் குழுமத்தின் முறைமைகள், ஊழிய வளம் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துவதற்காக முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. எனவே, நிதிசார் குற்றங்களுக்கு எதிராக போராடும் முயற்சியில் இதுவொரு முக்கிய சக்தியாக இருக்க முடியும்.

இதுபோன்ற நிச்சயமற்ற சந்தர்ப்பங்களில் குழுமமானது, முறையற்ற விதத்தில் குறுங்கால செயற்பாடுகளில் கவனத்தை திருப்பாமல், நீண்டகால அடிப்படையிலான முகாமைத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் இதிலிருந்து விலகியிருக்கும் நடைமுறையை பல தலைமுறைகளாக கடைப்பிடித்து வருகின்றது. மாறிவரும் வெளிப்புற சூழலுக்கு ஏற்ப குழுமம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், தற்போதுள்ள மற்றும் சந்தைகளுக்கிடையிலான வாய்ப்புக்களை முழுமையாக உணர்ந்து செயற்பட வேண்டுமென்றும் பணிப்பாளர் சபை தீர்மானித்திருக்கின்றது.

ஸ்டான்டர்ட் சார்ட்டட் குழும பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபையின் கூட்டமைவு, கட்டமைப்பு மற்றும் அளவு போன்றவை 2015 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டது. இந்த மாற்றங்களின் பயனாக 14 பணிப்பாளர்களை உள்ளடக்கிய சிறியளவிலான பணிப்பாளர் சபை 2016 ஏப்ரல் இறுதியில் உருவாகும். இதில் தலைவர், இரண்டு நிறைவேற்று பணிப்பாளர்கள் மற்றும் 11 சுயாதீன நிறைவேற்று-அந்தஸ்தற்ற பணிப்பாளர்கள் உள்ளடங்கியிருப்பர். வங்கியின் கூட்டமைவு விடயத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் - வங்கியியல், நிதி, இடர் மற்றும் கணக்கீட்டு திறன்கள் மற்றும் அனுபவம், வங்கியின் முக்கிய சந்தைகளில் இருந்தான பிரதிநிதித்துவம், அத்துடன் தொலைநோக்கின் பன்முகத்தன்மை என பரந்துபட்ட அடிப்படைகள் எல்லாம் ஒன்றாக கலந்திருக்கும் தன்மையை வங்கி பேணி வருகின்றது என்பதை உறுதி செய்வதாக காணப்படுகின்றது.

சுயாதீனமான மேற்பார்வையை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விடயத்தில் உதவும் முகமாக, பணிப்பாளர் சபை சில பொறுப்புக்களை செயற்குழுக்களுக்கு 'அதிகார ஒப்படைப்பு' செய்திருக்கின்றது. விதித் தொகுப்பின் ஏற்பாடுகளை கடைப்பிடிப்பதில் ஆளுகை மற்றும் முன்மொழிவு குழுவுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், குழுமத்தின் தலைவர் இச் குழுவிற்கு தலைமை வகிப்பதுடன் அனைத்து பணிப்பாளர் சபைக் குழுக்களும் சுயாதீன நிறைவேற்று-அந்தஸ்தற்ற பணிப்பாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் பணிப்பாளர் சபைக்கு ஆதரளிக்கும் விடயத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

சுயாதீன நிறைவேற்று அந்தஸ்தற்ற பணிப்பாளர்கள் நான்கு பேருக்கு மேலதிகமாக, பணிப்பாளர் சபை நிதிக் குற்றவியல் இடர் குழுவும் நான்கு சுயாதீன வெளிவாரி ஆலோசகர்களை கொண்டுள்ளது.

பன்முகத்தன்மை மற்றும் உள்ளிணைந்த தன்மை

ஸ்டான்டர்ட் சார்ட்டட் தனது ஊழியர்களிடையே சிறப்பான பன்முகத்தன்மையை ஊக்குவிக்கின்றது. இது, தம்முடைய ஊழியர்களை அபிவிருத்தி செய்யவும், தக்கவைத்துக் கொள்ளவும் உதவிபுரியும் அதேவேளை வங்கியின் பல்வகைப்பட்ட வாடிக்கையாளர் தளத்திற்கு நல்லதொரு ஆதரவை அளிக்கும் என்று வங்கி அங்கீகரித்து ஏற்றுக் கொள்கின்றது. பக்கச் சார்பான தன்மையற்ற ஒரு உள்ளிணைந்த சூழலை உருவாக்குவதில் வங்கி அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. இங்கு, தமது இயலுமையின் சாத்தியத்தன்மையை ஒவ்வொருவரும் முழுமையாக உணர்ந்து கொள்ள முடிவதுடன், அதன்படி செயலாற்றுவதன் மூலம் ஊழியர்கள் நிறுவனத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்க முடியும்.

ஸ்டான்டர்ட் சார்ட்டட், 10 வருடங்களுக்கு முன்னர் பன்முகத்தன்மை மற்றும் உள்ளிணைத்தல் ஆகியவற்றுக்காக முதன்முதலாக குழுமத்திற்குள் பரந்த (Group-wide) அணுகுமுறையை மையமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது முதற்கொண்டு, வங்கியானது வியாபாரத்தை மேற்கொள்ளும் வழிமுறையில் ஒரு அதிகரித்த அளவிலான முக்கியத்துவம் பொருந்திய ஒரு பகுதியாக அது இடம்பிடித்துள்ளது. ஸ்டான்டர்ட் சார்ட்டட் 2015ஆம் ஆண்டில் 'குளோபல் டைவேர்சிற்றி லிஸ்ட்' இன் ஸ்தாப போஷகராகியது. இது, உலகளாவிய பன்முகத்தன்மையின் ஒவ்வொரு அம்சத்தையும் உள்ளடக்கும் விதத்திலமைந்த உறுதியான பூகோள பன்முகத்தன்மை நியமத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டதாகும். இதற்கு மேலதிகமாக, லெஸ்பியன், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இருபாலார் மற்றும் திருநங்கைகளை (LGBT) உலகளாவிய ரீதியில் உள்ளிணைப்பதற்கான பரந்தளவிலான ஆதாரங்களை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட Open for Business coalition இன் ஸ்தாபக உறுப்பினராகவும் வங்கி திகழ்கின்றது.

மூலோபாய பிரச்சினைகள் மீதான கவனக்குவிப்பு

2015 காலப்பகுதியில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் ஆனது ஒரு உறுதிமிக்கதும் மிகவும் பல்வகைமை ஐந்தொகையை உருவாக்கியது. வங்கியானது, மேலும் செயற்திறனானதாக குழுமத்தை ஒழுங்குபடுத்தியதுடன் பெறுபேறுகளுக்கான தெளிவான பொறுப்புக்கூறும் தன்மையையும் ஏற்படுத்தியது. ஒரு உறுதியான ஐந்தொகை, தெளிவான கட்டமைப்பு ஆகியவை வங்கி தனது இலக்குகளை அடைந்து கொள்வதை சீராக்கும். அதிலும் குறிப்பாக வெளிப்புற நிலைமைகள் சவாலாக இருக்கின்ற வேளையில் உறுதுணையாக செயற்படும்.

உரித்து வழங்கல் ஊடான கிடைக்கப் பெற்ற உறுதிமிக்க பங்குரிமையாளர்களின் ஆதரவுடன் ஸ்டான்டர்ட் சார்ட்டட் ஆனது தனது நிதி நிலைமையை பலப்படுத்தியிருக்கின்றது. அதன்படி பொது பங்குரிமை தளம்-1 மூலதன வீதம் 12.6% ஆகவும், திரவச் சொத்து வீதம் 30.9% ஆகவும் அதேவேளை லெவரேஜ் வீதம் 5.5% ஆகவும் வங்கி பதிவுசெய்தது. தொழிற்பாட்டு இடர், நடத்தைசார் இடர், சந்தை இடர் மற்றும் கடன் இடர் உள்ளடங்கலாக குழுமத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு இறுக்கமான இடர் தாங்கும்திறன் அடையாளம் காணப்பட்டது.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கிரயக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் ஒரு அங்கமாக, குழுமத்திற்குள் பரந்தளவிலான பணிநீக்க செயன்முறையை திட்டமிடப்பட்ட மீள்கட்டமைப்பின் ஒரு பகுதியாக வங்கி ஆரம்பித்தது. இது பெருமளவுக்கு வருட இறுதியில் நிறைவுக்கு வந்திருந்தது. எதிர்கால சேமிப்புக்களுக்கான வாய்ப்புகள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், முக்கியமான முதலீட்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வாடிக்கையாளர் பிரிவை மாற்றத்திற்குள்ளாக்கும் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

நிதியியல் அறிக்கையிடல்

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பாக குழுவின் பிரதான பங்கு என்னவென்றால், குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் குழுமத்தின் நிதித் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஏதேனும் முறைசார் அறிவித்தல்களின் நேர்மைத்தன்மையை மேற்பார்வை செய்தலும் அதேபோன்று, அவற்றுள் உள்ளடங்கியுள்ள ஏதாவது முக்கியமான நிதியியல் அறிக்கையிடல் தீர்ப்பளிப்புக்களை மீளாய்வு செய்தலும் ஆகும். ஒவ்வொரு நிதி அறிக்கையிடல் காலப்பகுதி முடிவதற்கும் முன்னதாக, குழுமத்தின் நிதிப் பிரிவானது அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் தொடர்பட்ட விரிவான வழிகாட்டல்களை குழுமத்திற்குள் செயற்படும் அனைத்து நிறுவன பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கும். குழும நிதி மற்றும் அறிக்கையிடல் பிரிவுகளுக்கு இடையில் ஏதேனும் புதிய தேவைப்பாடுகள் தொடர்பிலான விரிவான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்தே இது அனுப்பப்படுவதுடன், புரிந்துணர்வை மேம்படுத்துகின்ற அதேநேரம் அறிக்கையிடல் நிலையான தன்மையை உறுதிப்படுத்தவதாக காணப்படும். கடன் வலுக்குறைவு, நிதியியல் கருவிகள் விலை மதிப்பீடு, நன்மதிப்பு மதிப்பீடு, முக்கியமான சட்ட வழக்குகள் மற்றும் ஓய்வூதியத்துடன் தொடர்புடைய கணிப்பீடுகள் போன்ற - நிபுணத்துவம் வாய்ந்த திறன்கள் அல்லது தீர்ப்பளிப்புக்கள் தேவையான சந்தர்ப்பங்களில், அச் செயற்பாட்டை மையப்படுத்தப்பட்ட அணிகள் முகாமைத்துவம் செய்வதுடன், அதனுடன் சம்பந்தப்பட்ட நாட்டிலுள்ள அணிகளுடன் இணைந்து இது விடயத்தில் பணியாற்றும்.

அறிக்கையிடும் ஒவ்வொரு நிறுவன பிரிவில் இருந்தும் குழுமத்தின் நிதிப் பிரிவுக்கு நிதியியல் தகவல்களை சமர்ப்பித்தலானது, சம்பந்தப்பட்ட நாட்டில் பொறுப்பாகவுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியின் சான்றுபடுத்தலைத் தொடர்ந்து பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும். பகுப்பாய்வு மீளாய்வு செயன்முறைகள், குறித்த நாட்டிற்கு உள்ளேயும் அதேபோல் குழும மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டது. கணக்கீட்டு நியமங்கள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான மாற்றங்கள், முக்கியமான கணக்கீட்டு பிரச்சினைகள் தொடர்பான அறிக்கைகளை ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் குழுமத்தின் நிதிப் பிரிவிடமிருந்து குழுவானது பெற்றுக் கொண்டது. இதில் வரி அறவீடும் உள்ளடங்கியிருந்தது. குழுமத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் எல்லாம் மிகப் பொருத்தமானவையாக காணப்படுகின்றன என்ற விடயத்தில் குழு திருப்தி அடைந்தது. 2018 ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து IFRS 9 நிதியியல் கருவிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிக்கைகளை இவ்வருட காலப்பகுதியில் குழும நிதிப் பிரிவிடமிருந்து குழு பெற்றுக் கொண்டது. இந்த அறிக்கைகள் - செயற்றிட்ட ஆளுகை, முக்கிய இடர்கள், நடைமுறைப்படுத்தல் அணுகுமுறை அதேபோன்று எதிர்பார்க்கப்பட்ட நிதியியல் தேவைப்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கி இருந்தது. நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுவதற்காக கணக்கீட்டு தேவைப்பாடுகளிலான மாற்றம் குறித்தும், புதிதாக எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு வலுக்குறைவு ஏற்பாட்டு அணுமுறை தொடர்பாகவும், அதேபோன்று IFRS 9 இனால் மேம்படுத்தப்பட்ட ஹெட்ஜிங் தேவைப்பாடுகள் பற்றியும் குழுவுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இடர் முகாமைத்துவம்

வங்கியானது தனது அனைத்து பங்குதாரர்களினதும் அக்கறைகளில் ஒரு நிலைபேறான உரிமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்காக தனது இடர்களை முகாமைத்துவம் செய்கின்றது. தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்ட ஒரு இடர் தாங்குதிறன் அறிக்கையை குழுமம் கொண்டிருந்தது. பணிப்பாளர் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த அறிக்கையானது, வங்கி தனது மூலோபாயத்தின் அடிப்படையில் பின்தொடர்ந்து செயற்படுவதற்கு தயார்நிலையில் உள்ள மிக உயர்ந்த மட்டத்திலான இடரை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது. ஸ்டான்டர்ட் சார்ட்டட் மிகவும் சரியாக நிறுவப்பட்ட இடர் ஆளுகை கட்டமைப்பு ஒன்றை கொண்டிருப்பதுடன், இடர் தாங்குதிறன் அறிக்கைக்கு இணங்க குழுமத்தின் இடர் விபரக்குறிப்பை பேணுவதற்காக நெருக்கமான முறையில் முகாமைத்துவம் செய்கின்றது. வங்கி தனது புதிய மூலோபாயத்தை 2015 இல் அறிவித்தது. அதேநேரத்தில், வியாபார மூலோபாயத்துடன் இடர் விபரக்குறிப்பை சீரமைப்பதற்காக இடர் தாங்குதிறன்களை மீளாய்வு செய்தது. தற்போதைய வியாபாரத்திற்காக வகைத்தொடர்கள், வியாபார மாதிரி மற்றும் வர்த்தகத்தை மேற்கொள்ளும் சந்தைகளில் மேற்கொள்கின்ற பிரதான வர்த்தக நடவடிக்கைகளுடன் ஒருங்கிசைவானதாக காணப்படுவகின்றது. ஐந்தொகை மிகவும் திரவத்தன்மை கொண்டதாக இருப்பதுடன், பரந்தளவிலான உற்பத்திகள், தொழிற்துறைகள், புவியியல் பரப்புக்கள் மற்றும் இடரை குறைப்பதற்கு சேவையாற்றுகின்ற வாடிக்கையாளர் பிரிவு முழுவதிலும் பல்வகைத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. ஸ்டான்டர்ட் சார்ட்டட் ஆனது, வெளிப்புறச் சூழலில் அவதானிக்கப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களை எதிர்கொள்ளும் நோக்கிலும் அதேபோன்று மாற்றமடைந்து செல்லும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையிலும் - எழுத்துறுதி அளிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் எல்லைகளை மீளாய்வு செய்து, சரிப்படுத்துகின்றது.

வர்த்தக குறியீடு மற்றும் பெறுமதிகள்

நன்னடத்தை என்பது குழுமத்திற்கும் அதேபோல் வர்த்தக குறியீடு, பெறுமதிகள் மற்றும் நன்னடத்தை குழுவுக்கும் ஒரு முன்னுரிமை அளிக்கப்படும் விடயமாக காணப்படுகின்றது. அதேநேரம் இக் குழுவானது குழுமத்தின் நடத்தை நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு கணிசமான நேரத்தை செலவிட்டுள்ளது. குழுமத்தின் ஒழுக்கநெறியாளை கலாசாரத்தை பலப்படுத்துவதற்காக ஒவ்வொரு மட்டத்திலும் ஊழியர்களினால் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகளை குழு கண்டறிந்துள்ளது. அத்துடன் குழுமத்தின் நற்பெயர் சார்ந்த இடர் வெளிப்படுத்தல் தன்மையை மீளாய்வு செய்துள்ளது. இவற்றுள், குழுமத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற முக்கிய நற்பெயர் சார்ந்த இடர்கள் அதேபோல் குழுமத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற நற்பெயரை பாதுகாப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் மூலோபாயங்கள் ஆகியவற்றின் மீதான பகுப்பாய்வும் உள்ளடங்குகின்றது.

குழுமத்தின் வர்த்தக குறியீடு மற்றும் சந்தைப்படுத்தல் முன்னெடுப்புக்கள் ஆகியவற்றின் மீதான மேற்பார்வையை குழு தொடர்ச்சியாக மேற்கொண்டது. அதுமட்டுமன்றி, முதலீடுகளில் இருந்தான வருமானத்தை குழுமம் உயர்ந்தபட்சமாக அதிகரித்துக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு தொடர்ச்சியான நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது. இது அனுசரணை வழங்கலின் பெறுமதியை மீளாய்வு செய்வதையும் உள்ளடக்கியுள்ளது. புதிதாக உடன்பாடு காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை ஏழு பில்லியன் மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கான Project Everyone என்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடனான ஒரு உலகளாவிய செயற்றிட்டம் தொடர்பிலான மீளாய்வையும் இது உள்ளடக்கி உள்ளது.

நிலைபேண்தகு தன்மை

2015ஆம் ஆண்டு இறுதியில், குழுமத்தின் புதிய மூலோபாயத்திற்கு அமைவாக நிலைபேண்தகு தன்மை தொடர்பான குழுமத்தின் அணுகுமுறையை குழு மீளாய்வு செய்தது. அத்துடன், அது குழுமத்தின் பிரதான வர்த்தகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டுமென்ற குழுமத்தின் எண்ணத்திற்கு முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கியது. குழுமம் தனது பிரதான வர்த்தகத்தின் ஊடாக தொடர்புபடும் முக்கியமான பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களின் மீது கவனக்குவிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயமும் உடன்பாடு காணப்பட்டது.

வருடம் முழுவதும், குழுவானது குழுமத்தின் சமூதாய செலவினை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து வந்தது. குழுமம் மேற்கொண்ட அணுகுமுறையின் காரணமாக, இரு குழு EV முன்னெடுப்பு திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட ஊழியர் தன்னார்வ (EV) நேரம் குறிப்பிடத்தக்க மட்டங்களில் பிரதிபலித்ததை குழு அவதானித்தது. அதேவேளை உள்ளூர் பாடசாலைகள் அல்லது தொண்டு நிறுவனங்களில் வழிகாட்டுதல் போன்ற பணிகளை மேற்கொண்டதன் மூலம், தன்னார்வ பணிக்காக வழங்கப்பட்ட வாய்ப்புக்கள் ஊழியர்களின் தனிப்பட்ட ரீதியிலும் எதிரொலித்ததை குழுவினால் காண முடிந்தது. உயர்தரமான திறன்களை அடிப்படையாகக் கொண்ட EV இன் வீதாசாரம் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை குழுவானது அங்கீகரித்தது.

வாடிக்கையாளர் மீதான கவனக்குவிப்பு

2015 ஜுலையில், தனது வர்த்தகத்தை மீள ஒழுங்கமைத்தல் தொடர்பில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் அறிவித்தது. ஐந்து உற்பத்தி வகைகளினால் ஆதரவளிக்கபடும் மூன்று வாடிக்கையாளர் வியாபாரங்கள் எளிமைப்படுத்தப்பட்டன. இதன்படி ஒவ்வொரு உற்பத்திகளும் இப்போது வாடிக்கையாளர் பிரிவுக்குள் அறிக்கையிடல் தொடர்பை கொண்டுள்ளன. அத்துடன் அது பின்வரும் விடயங்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்பை கொண்டுள்ளது. அதாவது – பரிவர்த்தனை வங்கியியல் உள்ளடங்கலாக கூட்டாண்மை, நிறுவன வங்கியியல்; கூட்டாண்மை நிதி மற்றும் நிதிச் சந்தைகள்; சொத்து முகாமைத்துவம் உள்ளடங்கலாக வணிக மற்றும் தனியார் வங்கியியல்; சில்லறை உற்பத்திகள் உள்ளடங்கலாக சில்லறை வங்கியியல் ஆகியவையாகும். இதற்கமைய எட்டு பிராந்திய வர்த்தகங்கள் நான்காக குறைக்கப்பட்டன. இம் மாற்றங்கள் அனைத்தும் 2015 ஒக்டோபர் 15 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்குகளில் இதன் பெறுபேறுகள் பிரதிபலித்திருக்கும்.

முறைப்பாடுகள் உருவாவதற்கு இட்டுச் செல்லக்கூடிய காரணிகளை கண்டறிந்து அவற்றை குறைக்கும் நோக்கத்திற்கு அமைவாக, வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளுக்கான முக்கிய காரணிகளை அடையாளம் காணல் மற்றும் நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில் அதிக கவனம் வெலுத்தப்பட்டது. மேலும், நிதியியல் நடத்தை அதிகார சபையின் (FCA) 'வாடிக்கையாளர்களை முறையாக நடத்துதல் தத்துவங்களின்' அடிப்படையில், பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதாவது, வாடிக்கையாளர்கள் உரிமை கோரிக்கைகளை முன்வைக்கின்ற போது அல்லது ஒரு முறைப்பாட்டை செய்கின்ற வேளையில் விற்பனைக்கு பின்னரான தடைகளை எதிர்கொள்ளாத நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கான செயன்முறைகளின் தன்னியக்கமாக்கம் மற்றும் தரநிலைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக மேலும் பரந்தளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்துனர் உறவுகள்

வர்த்தக குறியீடு, பெறுமதிகள் மற்றும் நடத்தை குழுவானது, வங்கியின் முக்கிய சந்தைகள் எங்குமுள்ள அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்தும் தரப்புடனான குழுமத்தின் அணுகுமுறையை தொடர்ச்சியாக கண்காணித்து வந்துள்ளது. அதுமட்டுமன்றி, அரசாங்கங்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஏற்றுக் கொள்கின்றது.

குழுமத்தின் பல்வகைப்பட்ட புவியியல் பரப்புகளிலான செயற்பாடுகளுடன் தொடர்புடைய காரணி தொடர்பில் குழு மிகவும் விழிப்புடன் பணியாற்றியது. பொதுவாக ஒரு நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான மேற்பார்வை விடயங்கள் அல்லது புலன்விசாரணைகள் இவ்வாறு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பெரிய பிரச்சினைகளுக்கும் பொருத்தமான முகாமைத்துவம்சார் கவனம் வழங்கப்படுவதை குழுவானது எதிர்பார்த்தது மட்டுமன்றி அதன்படி அதற்கான உறுதிமொழிகளையும் பெற்றிருக்கின்றது. அதேவேளை இது, குழுமத்திற்குள் உள்ள தொடர்புபட்ட ஆளுகைக் குழுவுக்கும் கணக்காய்வு குழுவுக்கும் இதுபற்றிய அறிக்கையிட்டுள்ளது.

பணச் சலவை, மேலிட ஒப்புதல் துஷ்பிரயோகம் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவை தொடர்பில் குழுமத்திற்கு ஏற்படுகின்ற - ஏதேனும் ஒழுங்குபடுத்தல் கட்டளை, ஒத்திவைக்கப்பட்ட வழக்கு தொடர்பான உடன்பாடு அல்லது ஏனைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் பரிகாரம் தேடுதல் அல்லது ஏனைய கடப்பாடுகளுடன் குழுமம்

கீழ்ப்படிந்து செயற்படுவதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபை நிதிக் குற்றவியல் இடர் குழுவானது 2015 ஜனவரியில் இருந்து ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் குழுமத்தின் வருடாந்த அறிக்கையில் இருந்து பெறப்பட்டவையாகும். முழுமையான அறிக்கையை www.sc.com என்ற இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.